முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No. 231/2018

தேதி : 19-11-2025

(பி.வா.சா.2) – திரு.சுபாஷ்சந்திரபோஸ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. வாதி மற்றும் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட கிரைய ஒப்பந்தத்தைபற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். அந்த கிரைய ஒப்பந்தத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அது எது சம்பந்தப்பட்டது என்றால் கொடைக்கானலில் உள்ள சொத்தை பொறுத்து மற்ற விபரங்கள் எனக்கு ஞாபகமில்லை. கிரைய ஒப்பந்தம் போடப்பட்ட அன்று என்ன பேசப்பட்டது, எவ்வளவு பேசப்பட்டது பற்றி தெரியுமா என்றால் தெரியும், அன்றைய தினம் ரூ.4 லட்சத்திற்கு சொத்து பேசப்பட்டது மற்றும் அந்த தொகை பிரதிவாதி வசம் கொடுக்கப்பட்டது, ஆனால் 2, 3 செண்ட் சொத்தை பதிவு செய்ய இயலாதநிலை இருந்ததால் வாதி பிரதிவாதியிடம் அவர் கொடுத்த பணத்தை திருப்பி கேட்டார், அதற்கு பிரதிவாதி ரூ. 2 லட்சம் கொடுத்துவிட்டு மீதம் ரூ.2 லட்சத்தை சொத்தை கிரையம் செய்தபின்னர் தருவதாக சொன்னார். சொத்து எவ்வளவிற்கு பேசப்பட்டது என்றால் சாட்சி தற்போது முன்பணம் ரூ. 4லட்சம் கொடுக்கப்பட்டது என்றும், கிரைய மதிப்பு என்ன என்று எனக்கு தெரியாது என்று கூறுகிறார். ரூ. 6 லட்சத்திற்கு சொத்து பேசப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

2. சாட்சியிடம் 12.11.2016ம் தேதியிட்ட கிரைய ஒப்பந்தம் காண்பிக்கப்பட்டு அதில் ரூ. 6 லட்சம் என்று சொல்லப்பட்டுள்ளது என்று கேட்டபோது சாட்சி 2, 3 சொத்துக்கள் பேசப்பட்ட நிலையில் எனவே அந்த ஆவணத்தை பற்றி என்னால் கூற இயலாது என்று சொன்னார். அந்த ஆவணத்தில் தன்னுடைய கையெழுத்து உள்ளதா என்று கேட்டபோது சாட்சி ஒப்புக்கொண்டார். 14.11.2016ம் தேதி பிரதிவாதி வாதிக்கு ஈடுகடன் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரிய அது தெரியாது. நான் தெரியாது என்று சொல்வது உண்மையல்ல என்றும், 14.11.2016ம் தேதி பிரதிவாதி

வாதியிடம் கடன் வாங்கிகொண்டு ஈடுகடன் பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் தான் ஈடுகடன் பத்திரம் எதுவும் எழுதிதரவில்லை என்று சொன்னாரா என்றால் சொல்லவில்லை. வாதியை எங்கு வைத்து எப்போது பார்த்தேன் என்றால் கொடைக்கானலில் வைத்து தேதி ஞாபகமில்லை, 2017, 2ம் மாதம், ரூ. 2 லட்சத்தை பிரதிவாதி வாதியிடம் கொடுக்கும்போது நான் பார்த்தேன். அதற்கு ஏதும் ஆவணம் எழுதப்பட்டதா என்றால் என் முன்பு எழுதப்படவில்லை, வேறு எழுதினார்களா என்று தெரியாது. ரசீது எழுதி வாங்கினீர்களா என்று பிரதிவாதியிடம் கேட்கவில்லையா என்றால் கேட்கவில்லை. 13.02.2017ம் தேதி பிரதிவாதி வாதியிடம் ரூ. 2லட்சம் கொடுத்தார் என்று சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. உண்மையில் கொடுத்திருந்தால் அதற்கு ரசீது வாங்கியிருப்பார் என்றும், அவ்வாறு கொடுக்காததால் ரசீது வாங்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி என் நண்பர் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

K RENUGADEVI
Digitally signed by K RENUGADEVI
Date: 2025.11.19 14:12:13 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.